2nd Copy

A 17

NOVEMBER 10, 1968 தபாலின் கேள்வி
களுக்கான பதில்கள்.

கேள்வி-1.

பதில்:-  <— இந்த மாதிரி தாலியைத்தான் எல்லா பெண் தெய்வங்-களுக்கும் அணிவிப்பார்கள் இதுதான் பழக்கம்.

தவிர,  <— இந்த மாதிரி தாலி அணிந்த தெய்வத்தை நான் பார்த்ததில்லை. அப்படியேதாவது அணிந்திருக்குமாகில் ஒரு தெய்வத்-திற்கு ஒரு தாலிக்கு மேல் இன்னொரு தாலி இருந்தால் அதையும் எடுத்து சும்மா அழகிற்காக தெய்வத்தின் கழுத்தில் போட்டு விடுவார்கள். ஆகையால்,  <— இந்தமாதிரி தாலியை வழக்கமாக எந்தத் தெய்வத்திற்கும் அணியமாட்டார்கள்.  <— இந்தமாதிரி ஒரு பொட்டுள்ள தாலியைத்தான் எல்லா தெய்வங்களுக்கும் அணிவார்கள். இந்தத் தாலிக்குப் பெயர் <u>பொட்டுங்காரை</u> என்று சொல்வார்கள்.

கேள்வி-2

பதில்:- பிராமணர்கள் கல்யாணத்தில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு பரியம் கொடுத்தால் பெண் வீட்டார் மாங்கல்யம் செய்து கொண்டு வர மாட்டார்கள். அப்பொழுது மாப்பிள்ளை வீட்டாரின் மாங்கல்யம் ஒன்றுதான் பெண்ணுக்கு கட்டுவார்கள்.

மாப்பிள்ளை வீட்டார் பெண்ணுக்கு பரியம் கொடுக்காவிட்டால் அப்போது பெண் வீட்டார் ஒரு மாங்கல்யம் செய்து கொண்டு வருவார்கள்.

இதை <u>கன்னிகா தானம்</u> என்று சொல்வார்கள். அதாவது தங்களுடைய பெண்ணுக்காக எதையும் பெற்றுக் கொள்ளாமல் சும்மாவே பெண்ணை தானம் செய்து கொடுப்பது போலாகும். அதனால் தான் இப்படி நடப்பதை கன்னிகாதானம் என்று சொல்கிறார்கள்.

இப்படி கன்னிகாதானம் செய்து கொடுக்கும் போது பெண் வீட்டார் செய்து கொண்டு வரும் மாங்கல்யத்தையும், மாப்பிள்ளை வீட்டார் செய்து கொண்டு வரும் மாங்கல்யத்தையும் ஒரே நூலில் கோர்த்து முகூர்த்தத்தின் போது பெண்ணுடைய கழுத்தில் மாப்பிள்ளை கட்டுவார்.

ஆகவே, பெண்வீட்டார் மாங்கல்யம், மாப்பிள்ளை வீட்டார் மாங்கல்யம் இரண்டையுமே பெண்ணுக்கு கட்டப்படுகிறது பிராமணர் ஜாதியில்.

கேள்வி 4.

பதில்:- கவுண்டர்களின் கல்யாண சீரின்பொழுது தட்டங்களில் அரிசி போட்டு அதன்மேல் வெற்றிலை பாக்கும் ஒரு வெல்லமும் வைக்கிறார்கள். ஆனால், அவைகளுக்கு தனிப்பட்ட பெயர் ஒன்றுமில்லையென்று சொல்கிறார்கள். ஆகவே, எந்தெந்தச் சீருக்கு எவ்வளவு அரிசி போட்டு வைக்கிறார்கள் என்பதை மட்டும் கூற முடியும்.

அது:- முகவேலை (முகக்ஷவரம்) செய்வதற்கு நான்கு (4) வள்ளம் அரிசி. அதன்மேல் வெல்லம் 1.

மாப்பிள்ளைக்கு காப்புக் கட்டுவதற்கு ஒரு (1) வள்ளம் அரிசி அதன்மேல் வெல்லம் 1.

பெண்ணுக்கு காப்புக்கட்டுவதற்கு அரிசி ஒரு (1) வள்ளம் அதன்மேல் வெல்லம் 1.

இணைச்சீர் செய்வதற்கு நான்கு (4) வள்ளம் அரிசி. அதன்மேல் வெல்லம் 1.

முகூர்த்தத்திற்கு நான்கு (4) வள்ளம் அரிசி. அதன்மேல் வெல்லம் 1

இவைகளில் மாப்பிள்ளைக்கு முகவேலைக்குப் போகும் அரிசி, காப்புக்கட்டுவதற்கு போகும் அரிசி, இணைச்சீருக்கு போகும் அரிசி இவைகள் எல்லாம் அத்துடன் சேர்ந்த வெல்லங்களும் மாப்பிள்ளை வீட்டு நாவிதனுக்கு சேர்ந்தவைகள்.

பெண்ணுக்கு காப்புக்கட்டுவதற்கு போகும் அரிசியும், முகூர்த்தத்திற்கு போகும் அரிசியும் பெண் வீட்டு நாவிதனுக்கு சேர்ந்தவைகள்.

தவிர, நீங்கள் குறிப்பிட்டதுபோல் அரிசி குவியல் மேல் வைப்பது பனை வெல்லம் அல்ல. அது: கரும்பு வெல்லம். தவிர, தட்டங்களில் போட்டு வைக்கும் அரிசி ~~ச~~ பச்சரிசி அல்ல. புழுங்கல் அரிசி.

கேள்வி 5.

பதில்:- நிறை நாழி என்பது ஒரு சடங்குப் பொருள்தான். "நாழி" என்பது முன்கால அளவுபடியின் பெயர் என்று சொல்கிறார்கள். அதன் நிறைய நெல்போட்டு வைப்பதனால் நிறை நாழி என்ற பெயர் வந்திருக்கலாம். ஆனால், அதில் குத்தப்படும் நாணுடன் தார்க்கருது எதைக் குறிக்கிறது என்று தெரியவில்லை.

கேள்வி-7.

பதில்:- மாரியம்மன் கோவிலிலும் மற்ற கோவில்களிலும் பூப்பொட்டலம் கட்டிப்போட்டு பூக்கேட்பதுண்டு. அவைகள் நீங்கள் குறிப்பிட்டதுபோல் 6 பொட்டலங்கள் கட்டிப் போடுவதுண்டு. அவைகளில் மூன்று சிவப்பு பூவும், மூன்று வெள்ளைப்பூவும் இருக்கும். பிறகு, அவைகளை தெய்வத்தின் முன்போட்டு பூஜைசெய்து எடுத்துப் போடுவார்கள். அப்போது பூக்கேட்க வந்திருப்பவர் "என்மகனுக்கு இதே மாதத்தில் கல்யாணம் செய்து விடலாமென்றால் எனக்கு முதலில் செம்பூ இரண்டாவது வெள்ளைப்பூ இருக்கவேண்டு-மென்று தெய்வத்தை மனதில் நினைத்து வேண்டிக் கொள்வார். அப்போது அவரோ, அல்லது ஒரு சிறிய பையன், அல்லது பெண் யாரோ ஒருவர் ஒரு பூப்பொட்டலத்தையெடுத்து பூசாரியின் கையில் கொடுப்-பார்கள். பூசாரி அதைவாங்கி பொட்டலத்தை பிரித்துக் காட்டுவார். அப்போது, பூக்கேட்டவரின் நினைப்புப்படி முதல் பூ செம்பூவே வந்துவிட்டதாகவே வைத்துக் கொள்வோம். அதே மாதிரி இரண்-டாவது எடுத்துப் பிரித்துப் பார்த்தால் அதுவும் அவர் குறித்த மாதிரி வெள்ளைப்பூவாக இருந்துவிட்டால் தன்னுடைய மகனுக்கு அதே மாதத்தில் கல்யாணம் செய்துவிடலாம் என்று முடிவு செய்துவிடுவார்.

மேற் குறிப்பிட்டபடி பூ வராமல் மாறி இரண்டு முறையும் செம்பூவே வந்துவிட்டால் "இந்தமாதத்தில் மகனுக்கு கல்யாணம் நடைபெறாது நடத்தினாலும் சுத்தப்படாது" என்று நினைத்துக் கொள்வார்.

அல்லது முதலில் வெள்ளைப்பூவும், இரண்டாவது செம்பூவும் கிடைத்-தாலோ, அல்லது இரண்டு முறையும் வெள்ளைப்பூவே கிடைத்தாலோ "இந்த மாதத்தில் கண்டிப்பாய் நம் மகனுக்கு இந்தமாதமும் கல்யாணம் செய்யக்-கூடாது" என்று முடிவு செய்து விடுவார்.

மேற்கண்ட படி முதலில் செம்பூவும் இரண்டாவது வெள்ளைப்பூ கேட்பதும் சீக்கு (நோய்) தவிர மற்ற எல்லாக் காரியங்களுக்கும் கேட்பார்கள். எந்தக் காரியங்களுக்கு கேட்டாலும் அவர்கள் குறித்தபடி சரியாக பூ வராவிட்டால் மேலே நான் குறிப்பிட்டமாதிரி தான் நினைப்பார்கள்.

அதே மாதிரி ஒருவருக்கு தீராதநோய் அல்லது பேய் பிடித்தவர்கள் வந்து தெய்வத்திடம் பூக்கேட்டால் "எனக்கு இந்தச் சீக்கு குணமடைந்துவிடுமென்றால் (வினை நீங்கி விடுமென்றால்) முதலில் வெள்ளைப்பூ கொடுத்து இரண்டாவது செம்பூ கொடுக்கவேணும் என்று கேட்டுக் கொள்வார்கள். அவர் கேட்டமாதிரியே முதலில் வெள்ளைப்பூவும் இரண்டாவது செம்பூவும்

வந்தால் அவருடைய சீக்கு கண்டிப்பாய் குணமடைந்து விடுமென்று நம்புவார். அவர் கேட்டதற்கு மாறாக அதாவது இரண்டு முறையும் வெள்ளைப்பூ வந்துவிட்டால் பூக்கேட்ட நபர் "நம் சீக்கு குணமாகாது போலிருக்கிறது" என்று சந்தேகப் படுவார்.

அல்லது செம்பூ வந்து வெள்ளைப்பூ வந்தாலோ, இரண்டு முறையும் செம்பூவே வந்தாலோ "கண்டிப்பாய் நம் சீக்கு குணமடையாது" என்று நினைத்துக் கொள்வார். பேய் நீங்குவதற்கு கேட்பவர்களும் இதே மாதிரிதான்.

மற்றபடி நீங்கள் குறிப்பிட்டதுபோல்

சிவப்பு - சிவப்பு அவ்வளவாக சுத்தமில்லை (நல்லதில்லை)
சிவப்பு - வெள்ளை இது: திருமணம் போன்ற மங்கள காரியங்களுக்கும் எல்லாவிதமான நல்ல காரியங்களுக்கும் நல்லது.

வெள்ளை - வெள்ளை. இது: அவ்வளவாக நல்லதில்லை
வெள்ளை - சிவப்பு இது:- சீக்கு, பேய் நீங்குவதற்கு கேட்டால் நல்லது.

தவிர, சிலபேர்கள் பூக்களை மாற்றியும் கேட்பார்கள். எப்படியென்றால் கல்யாணம் செய்வதற்கோ அல்லது வீடு கட்டுவதற்கோ பூக்கேட்டால் முதலில் வெள்ளைப்பூ கேட்டு இரண்டாவது செம்பூ கேட்பார்கள். இதுபற்றி நினைக்கும் போது பூக்கேட்பவர் மனதில் முதலில் எந்தப்பூவை நினைக்கிறாரோ அதையே நல்லதாக நினைக்கும் பழக்கம் உள்ளவர் போலும். இப்படி சிலபேர்மட்டும் பூக்களை மாற்றிக்கேட்கும் பழக்கம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆனால், வழக்கமான முறையில் அதாவது நான் முன்பு குறிப்பிட்டதுபோல் பூக்கேட்கும் நபர்கள் அதிகம்.

November 10, 1968 [illegible] கேள்விகளின் பதில்கள்.

2nd copy

கேள்வி-2.

பதில்:- முன்காலத்தில் எப்போதும் பூநூல் அணிந்திருந்த ஜாதிகள்

1. பிராமணர்
2. சோழி ஆசாரி
3. கொங்கு ஆசாரி
4. கோமுட்டி செட்டியார்
5. தேவாங்கு செட்டியார்
6. உடையார்

மேற்கண்ட ஜாதிகளில் பிராமணர், கோமுட்டி செட்டியார், தேவாங்கு செட்டியார், சோழி ஆசாரி இவர்கள் ஜாதியில் இன்னும் வழக்கமாக பூநூல் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இருந்தாலும் பிராமணர்தான் இப்பவும் பூநூல் போட்டுக் கொண்டு இருக்கிறார். மற்றவர்கள் இந்தக் காலத்தில் சிலர் பூநூலே இல்லாமலும் இருக்கிறார்கள். ஆனால் மேற்கண்ட ஜாதியினர்கள் எல்லோரும் எப்பொழுதும் பூநூல் போட்டுக் கொள்ள ஏற்பட்டவர்கள் என்று சொல்லுகிறார்கள். மற்றபடி கணக்குப்பிள்ளை மற்றும் சில செட்டியார்கள் இவர்கள் எல்லாம் அவர்களுடைய கல்யாண காலங்களிலும் மற்றும் ஏதாவது சீர் நடக்கும் காரியங்களிலும் பூநூல் போட்டுக் கொண்டு சீர்முடிந்ததும் பூநூல் கழட்டி விடுவார்கள்.

மற்ற இதர ஜாதிகள் எல்லோரும் அவர்கள் கோயில்களுக்கு பூசாரியாக இருக்க வேண்டியிருந்தால் அப்போது கங்கணம் (காப்புக்) கட்டுவார்கள். கங்கணம் கட்டுகையில் பூநூல் போடுவார்கள். பிறகு கங்கணம் அவிழ்க்கும் போது பூநூலும் எடுத்து விடுவார்கள் அவ்வளவுதான்.

கேள்வி-6.

பதில்:- கவுண்டர்களின் கல்யாணத்தில் மணமகளின் கால்களை கழுவுவது நாவிதன். பண்டாரங்கள் கல்யாணத்திலும் மணமகள் கால்களை நாவிதன் கழுவுவான்.

நாவிதன் வீட்டில் கல்யாணம் நடந்தால் மணமகளுக்கு கால்கள் கழுவுவது பெண்ணின் தங்கை, அல்லது அந்த முறையில் வேறு ஏதோ ஒரு பெண் கழுவுவாள்.